www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

V9SS

விருதுநகர் மாவட்டம்

காலாண்டுப் பொதுத் தேர்வு - செப்டம்பர் 2024

-----

வகுப்பு 10

காலம்: 3.00 மணி | சமூக அறிவியல் | மதிப்பெண்கள்: 100

பகுதி - I

**I. சரியான விடையைத் தேர்ந்தெடு:** 14×1=14

1) பத்தொன்பதாம் நூற்றாண்டு முடிவடையுந்தருவாயில் கிழக்கு ஆசியாவின் உதயமான வலிமை வாய்ந்த நாடு எது?
அ) சீனா ஆ) ஜப்பான் இ) கொரியா ஈ) மங்கோலியா

2) ஜெர்மனியோடு மியூனிச் உடன்படிக்கையில் கையெழுத்திட்ட பிரிட்டன் பிரதமர் யார்?
அ) சேம்பர்லின் ஆ) வின்ஸ்டன் சர்ச்சில்
இ) லாயிட் ஜார்ஜ் ஈ) ஸ்டான்லி பால்டுவின்

3) 'சத்யார்த்த பிரகாஷ்' எனும் நூலின் ஆசிரியர் யார்?
அ) தயானந்த சரஸ்வதி ஆ) அயோத்திதாசர்
இ) அன்னிபெசன்ட் ஈ) சுவாமி சாரதாநந்தா

4) பழைய வண்டல் படிவுகளால் உருவான சமவெளி ............
அ) பாபர் ஆ) தராய் இ) பாங்கர் ஈ) காதர்

5) இந்தியாவின் காலநிலை ............ ஆகப் பெயரிடப்பட்டுள்ளது.
அ) அயனமண்டல ஈரக்காலநிலை ஆ) நிலநடுக்கோட்டுக் காலநிலை
இ) அயனமண்டல பருவக்காற்று காலநிலை ஈ) மித அயனமண்டலக் காலநிலை

6) உலகிலேயே மிக நீளமான அணை
அ) மேட்டூர் அணை ஆ) கோசி அணை
இ) ஹிராகுட் அணை ஈ) பக்ராநங்கல் அணை

7) இந்தியாவில் முதல் அணுமின்நிலையம் நிறுவப்பட்ட மாநிலம்
அ) குஜராத் ஆ) இராஜஸ்தான் இ) மகாராஷ்டிரம் ஈ) தமிழ்நாடு

8) மக்கள்தொகையின் பல்வேறு அம்சங்கள் பற்றிய அறிவியல் பூர்வமான படிப்பு
அ) வரைபடவியல் ஆ) மக்களியல் இ) மானுடவியல் ஈ) கல்வெட்டியல்

9) நமது அடிப்படைக் கடமைகளை ............ இடமிருந்து பெற்றோம்.
அ) அமெரிக்க அரசியலமைப்பு ஆ) கனடா அரசியலமைப்பு
இ) ரஷ்ய அரசியலமைப்பு ஈ) ஐரிஷ் அரசியலமைப்பு

10) உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி மற்றும் மற்ற நீதிபதிகளை நியமிப்பவர்
அ) குடியரசுத்தலைவர் ஆ) இந்திய அரசின் தலைமை வழக்கறிஞர்
இ) ஆளுநர் ஈ) பிரதம அமைச்சர்

11) அமைச்சரவையின் தலைவர்
அ) முதலமைச்சர் ஆ) ஆளுநர் இ) சபாநாயகர் ஈ) பிரதம அமைச்சர்

12) பணிகள் துறையில் நடப்பு விலையில் மொத்த மதிப்புக் கூடுதல் 2018-2019-ல் ............ லட்சம் கோடி என மதிப்பிடப்பட்டுள்ளது.
அ) 91.05 ஆ) 92.26 இ) 80.07 ஈ) 98.29

13) ............ இந்தியாவில் தோன்றியதால் உணவு தானிய உற்பத்தியில் தன்னிறைவு பெற வழிவகுத்தது.
அ) நீலப்புரட்சி ஆ) வெள்ளைப்புரட்சி இ) பசுமைப்புரட்சி ஈ) சாம்பல் புரட்சி

14) **சரியான கூற்றை தேர்வு செய்க:**
**கூற்று** : விலை குறைந்ததால் வாங்கும் சக்தி அதிகரிக்கிறது மற்றும் இது நேர்மாறானது.
**காரணம்** : பொருள்களின் உற்பத்தி குறைந்து விலை அதிகரிப்பதால் வாங்கும் திறன் பாதிக்கப்படுகிறது.
அ) கூற்று சரியானது, காரணம் தவறானது.
ஆ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் தவறானது.
இ) கூற்று சரியானது, ஆனால் காரணம் சரியான விளக்கம் அல்ல.
ஈ) கூற்று சரியானது, காரணம் கூற்றின் சரியான விளக்கம்.

பகுதி - II

**II. ஏதேனும் 10 வினாக்களுக்கு விடையளிக்கவும்:** 10×2=20
**(வினா எண் 28-க்கு கண்டிப்பாக விடையளி)**

15) மூவர் கூட்டு நாடுகளின் பெயர்களைக் குறிப்பிடுக.
16) பன்னாட்சி நிதியமைப்பின் (IMF) நோக்கங்கள் யாவை?
17) 'டாலர் ஏகாதிபத்தியம்' தெளிவுபட விளக்குக.
18) பிரம்ம சமாஜத்தால் ஒழிக்கப்பட்ட சமூகத் தீமைகள் யாவை?

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

19) லட்சத்தீவுக் கூட்டங்கள் பற்றி விவரி.
20) காலநிலையை பாதிக்கும் காரணிகளை பட்டியலிடுக.
21) இந்தியாவின் வேளாண்மை முறைகளைக் குறிப்பிடுக.
22) நிலக்கரியின் வகைகளை அதன் கரிம அளவுகளுடன் குறிப்பிடுக.
23) நீதிப்பேராணை (Writ) என்றால் என்ன?
24) உச்சநீதிமன்ற நீதிபதி ஆவதற்கான தகுதிகள் யாவை?
25) நாட்டு வருமானம் என்றால் என்ன?
26) உலகமயமாக்கல் என்றால் என்ன?
27) உணவு மற்றும் ஊட்டச்சத்து பாதுகாப்பின் மூன்று அடிப்படைக் கூறுகள் யாவை?
28) தங்க மதிப்பீட்டளவு குறிப்பு வரைக.

## பகுதி - III

**III. ஏதேனும் 10 வினாக்களுக்கு விடையளிக்கவும்:** **10×5=50**
**(வினா எண் 42-க்கு கண்டிப்பாக விடையளிக்கவும்)**

29) **கோடிட்ட இடங்களை நிரப்புக:**
   i) ............ ஆம் ஆண்டில் ஜப்பான் சீனாவுடன் வலுக்கட்டாயமாக ............ போரிட்டது.
   ii) இராமகிருஷ்ணா மிஷன் ............... ஆல் நிறுவப்பட்டது.
   iii) ............... நாட்டின் உண்மையான தலைவராகவும், நாட்டின் முக்கியச் செய்தி தொடர்பாளராகவும் செயல்படுகிறார்.
   iv) இந்தியாவில் ............... துறை முதன்மைத் துறையாகும்.
   v) ............... ஆம் ஆண்டில் தேசிய உணவு பாதுகாப்புச் சட்டம் இந்திய நாடாளுமன்றத்தால் நிறைவேற்றப்பட்டது.
30) ஐக்கிய நாடுகள் சபையின் அமைப்பு, செயல்பாடுகளை ஆய்வு செய்க.
31) ஜெர்மனியுடன் தொடர்புடைய வெர்செய்ல்ஸ் உடன்படிக்கையின் சரத்துக்களை கோடிட்டுக் காட்டுக.
32) 19 ஆம் நூற்றாண்டில் சீர்திருத்த இயக்கங்கள் நடைபெறுவதற்கு இட்டுச் சென்ற சூழ்நிலைகளை விவாதிக்கவும்.
33) பல்நோக்கு திட்டம் என்றால் என்ன? ஏதேனும் இரண்டு இந்திய பல்நோக்கு திட்டங்கள் பற்றி எழுதுக.
34) நகரமயமாக்கம் என்றால் என்ன? அதன் சிக்கல்கள் யாவை?
35) இந்திய தொழிலகங்கள் எதிர்கொள்ளும் முக்கிய சவால்கள் யாவை?
36) **வேறுபடுத்துக:**
   1. வடகிழக்கு பருவக்காற்று மற்றும் தென்மேற்குப் பருவக்காற்று
   2. வேளாண் சார்ந்த மற்றும் கனிமம் சார்ந்த தொழிலகங்கள்
   **காரணம் கூறு:** வேளாண்மை இந்தியாவின் முதுகெலும்பு
37) இந்திய பிரதம அமைச்சரின் பணிகள் மற்றும் கடமைகள் யாவை?
38) உலகமயமாக்கலின் சவால்களை எழுதுக.
39) பசுமைப்புரட்சி ஏன் தோன்றியது என்பதை பற்றி விவரி.
40) வேளாண்மை இல்லாத உலகை கற்பனை செய்து பார்க்க முடியுமா?
41) **பின்வருவனவற்றிற்கான காலக்கோட்டை வரையவும்:**
   1920 - 1940 வரையிலான ஐந்து முக்கிய நிகழ்வுகளை காலக்கோட்டில் எழுதவும்.
42) **உலக வரைபடத்தில் கீழ்க்கண்ட நாடுகளைக் குறிக்கவும்:**
   1. ஜெர்மனி 2. பிரிட்டன் 3. பிரான்ஸ் 4. கிரீஸ் 5. ஜப்பான்

## பகுதி - IV

**IV. இரண்டு கேள்விகளுக்கும் விடையளி:** **2×8=16**

43) பெண்களின் மேம்பாட்டிற்கு 19 ஆம் நூற்றாண்டு சீர்திருத்தவாதிகள் ஆற்றிய பணிகள் குறித்து கட்டுரை வரைக. **(அல்லது)**
   முதல் உலகப்போருக்கான முக்கிய காரணங்களை விவரி.
44) **கீழ்க்கண்ட இடங்களை இந்திய வரைபடத்தில் குறிக்கவும்:**

அ) (i) ஆரவல்லி (ii) தக்காண பீடபூமி
(iii) பிரம்மபுத்திரா (iv) கடகரேகை
(v) பாரதீப் (vi) பன்னா உயிர்க்கோள பெட்டகம்
(vii) வடகிழக்கு பருவக்காற்று வீசும் திசை (viii) கரிசல் மண் காணப்படும் பகுதி

**(அல்லது)**

ஆ) (i) இரும்பு கிடைக்கும் இடம் ஒன்று (ii) நிலக்கரி கிடைக்கும் இடம் ஒன்று
(iii) மென்பொருள் தொழில்கள் (iv) பருத்தி நெசவாலை ஒன்று
(v) அணுசக்தி நிலையம் ஒன்று (vi) மைக்கா கிடைக்கும் இடம் ஒன்று
(vii) மும்பை-கொல்கத்தா வான்வழி (viii) துறைமுகம் ஏதேனும் ஒன்று

------------

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com